

சர்வதேச தரத்தில் மருத்துவ சேவையாற்றும்
மியாட் மருத்துவமனை தலைவர்

# டாக்டர் மோகன்தாசுக்கு கவுரவ டாக்டர் பட்டம்

## மேற்கு வங்காள கவர்னர் வழங்கினார்

சென்னை, ஆக.25–
சென்னை மியாட் மருத்துவமனையில் நடந்த விழாவில் மருத்துவமனை தலைவர் பேராசிரியர் டாக்டர் பி.வி.ஏ.மோகன் தாசுக்கு, மேற்கு வங்காள மாநில கவர்னரும், கல்யாணி பல்கலைக்கழக வேந்தருமான எம்.கே. நாராயணன். கவுரவ டாக்டர் பட்டத்தை (அறிவியல் மருத்துவர்) வழங்கினார். விழாவில் பல்கலைக்கழக துணை–வேந்தர் பேராசிரியர் திலிப்குமார் மொகந்தா, பல்கலைக்கழக பதிவாளர் உத்பால் பட்டாச்சாரியா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மியாட் மருத்துவமனையில் டாக்டர் பி.வி.ஏ.மோகன் தாஸ், சர்வதேச தரத்திற்கு மருத்துவ சிகிச்சை நம் நாட்டிலும் கிடைப்பதற்காக கனவு கண்டு, அதனை மியாட் மருத்துவமனை மூலம் வெற்றிகரமாக நிறைவேற்றி உள்ளார். குறிப்பாக நாட்டிலேயே இடுப்பு மாற்று அறுவை சிகிச்சை உட்பட மருத்துவ துறையில் பல்வேறு துறைகளில் முன்னோடியாகவும் திகழ்ந்தார்.

மருத்துவதுறையில் அவருடைய சாதனைகளையும், அவருடைய திறமையையும் கவுரவிக்கும் வகையில் 1992–ஆம் ஆண்டு பத்மஸ்ரீ விருதும் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது அவருடைய மருத்துவ சேவையை கவுரவிக்கும் வகையில் மேற்கு வங்காளத்தில் உள்ள கல்யாணி பல்கலைக்கழக இந்த சிறப்பு பட்டமளிப்பை அங்கீகரித்துள்ளது. பல்கலைக்கழக மேம்பாட்டு அலுவலர் காசிக் முகர்ஜி நன்றி கூறினார்.